# 2. புதுத்திறனாய்வு

அலகு -2

ப. ரமேஷ்

# கட்டுரை உள்ளடக்கம்

- புதுத்திறனாய்வு தோற்றம் வளர்ச்சி
- சமூகச் சூழல்
- இங்கிலாந்து-அமெரிக்கா- இரஷ்யா
- கோட்பாட்டாளர்கள்
  - ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்
    - கவிதை புதிரானது அல்ல
    - கவிதையும் சொற்களும்
    - இலக்கிய உண்மையும் அறிவியல் உண்மையும்
    - கவிதை வாசிப்பும் தவறாகப் புரிதலும்
  - வில்லியம் எம்சன்
    - ஏழு வகையான பொருள் மயக்கம்

# கட்டுரை உள்ளடக்கம்

- கிளியந்த் புரூக்ஸ் [ Cleanth Brooks]
  - கவிதை குறித்த மூன்று தவறான கருத்துகள்
  - கவிதை உண்மையின் தன்மை
  - குறிப்பும் முரணும்
- புதுத்திறனாய்வுக் கோட்பாடுகள்
  - இலக்கியப் படைப்பாளி குறித்த கோட்பாடு
  - இலக்கியப் படைப்புக் குறித்த கோட்பாடு
  - இலக்கியமொழி குறித்த கோட்பாடு
  - இலக்கியப் பொருள் குறித்த கோட்பாடு
  - கலை கலைக்காகவே என்ற கோட்பாடு
  - சிக்காக்கோ திறனாய்வாளர்கள்
- புதுத்திறனாய்வும் தமிழ் இலக்கியச் சூழலும்

# புதுத்திறனாய்வு தோற்றம் வளர்ச்சி

- புனைவியல் திறனாய்வு (Romantic Criticism)
  - 1. படைப்பாளர் (Author)
  - 2. படைப்பு (Text)
  - 3. வாசகர் (Reader)

  படைப்பாளி கடவுளுக்கு நிகராகப் போற்றப்பட்டார்

  கருத்துக்களால் ஆனது இலக்கியம்
- நியூ கிரிட்டிசம் (New Criticism) 1920
  - படைப்பு (Text)

  படைப்பு முதன்மைப்படுத்தப்பட்டது

# சமூகச் சூழல்

- தொழிற்புரட்சி
- புதிய கண்டுப்பிடிப்புகள்
  - நீராவி இயந்திரம்
  - டீசல் இயந்திரம்
  - மின்காந்தம் போன்றவை

# இங்கிலாந்து-அமெரிக்கா- இரஷ்யா

- இங்கிலாந்து 1920
- அமெரிக்கா - அனுபவக்கோட்பாடு
  - தாமஸ் ஹெப்ஸ்,
  - ஜான் லாக்.
  - டேவிட் ஹ்யூம்

ஐம்புலன்களின் வழி பெறப்படும் அனுபவம்

மொழி குறித்த ஆய்வு

பெர்டினண் டி ச்சூர்

புளூம்பீல்டு

சொற்களால் ஆனது இலக்கியம்

மொழியினால் புனையப்படும் ஓர் அமைப்பு

- டி.இ. ஹல்ம் (T.E.Hulme)
- உய்மானங்கள்
  - உரைநடை ஆவணங்கள் - கவிதை -
  - படிமம் - அலங்காரமல்ல- சாரம்
  - கவனமான வாசிப்பு
- தப்பித்தல் உணர்வு
  - உலகப்போர் - நகரமயமாதல், வணிகமயமாதல்

## இரஷ்யா

உருவவியல் (Formalism)

- 1917 அக்டோபர் புரட்சி முன்
- 1915 இல் மாஸ்கோ மொழியில் வட்டம்
- 1916 இல் கவிதையியல் ஆய்வுக் கழகம்
- ரோமன் யாக்கப்சன்
  - 1920 இல் பிராஹா மொழியில் வட்டம்
  - ரெனிவெல்லாக் சேர்ந்தார்
  - விக்டர் எர்லிச் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்
  - ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தினார்
  - இரஷ்ய உருவவியல் - வரலாறும் கோட்பாடும் 1955

# யாக்கப்சன் கூற்று

- “உருவவியல் தனது ஆராய்ச்சிக் களமாகக் கருதுவது இலக்கியமல்ல. மாறாக குறிப்பிட்ட ஓர் இலக்கியத்தை எந்தக் கூறு அல்லது எந்தப் பண்பு அதை இலக்கியமாக வடிவமைக்கிறது என்பதே ஆகும்”

# புதுத்திறானய்வுக் கோட்பாட்டாளர்கள்

- ஜான்குரோவ் ரான்சம்
  - புதுத்திறனாய்வு 1941 நூல்

ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்
கென்னர்த் பர்க்
ஆலன்டேட்
வோர் விண்டர்ஸ்
வில்லியம் எம்சன்
கிளியந்த புருக்ஸ்
ஜான் எல்லீஸ்

## ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்

1898 இல் பிறந்தார்
கேம்பிரிட்ஜ்
1919 ஆங்கிலப்பேராசிரியர்
இங்கிலாந்து , அமெரிக்கா வில் பணியாற்றினார்

நூல்கள்

- அர்த்தங்களின் அர்த்தம்
- இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகள்
- செய்முறைத் திறனாய்வு

திறனாய்வு நூல்கள்

- அறிவியலும் கவிதையும்
- கற்பனை குறித்து காலிரிட்ஜ்
- அணி இலக்கணத்தின் த்த்துவம்
- உய்மானக் கருவிகள்

## கவிதை புதிரானது அல்ல

- கவிதையும் சொற்களும்
- இலக்கிய உண்மையும் அறிவியல் உண்மையும்
- உருவக மொழியும் காட்சி மொழியும்
  - பசிப்பிணி மருத்துவன்
- கவிதை வாசிப்பும் தவறாகப் புரிதலும்

# வில்லியம் எம்சன் (William Empson)

- ரிச்சர்ட்ஸ் பின்பற்றியவர்
- ஏழு வகையான பொருள் மயக்கம் – நூல்
  - கவிதைப் பிரதி – அதன் மொழி
  - வேறுநூல்கள்
    - முல்லைப்பாட்டு( Versions of Pastoral,1935)
    - சிக்கலான வார்த்தைகளின் அமைப்பு (Structure of Complex word -1951)
    - சொல்லப்பட்ட ஒரு கவிதைகளில் அமைந்துள்ள சொற்களின் நுண்ணிய பொருள் வேறுபாடு காரணமாக, வேறான மற்றொரு பொருள் கொள்ளும்படியாக அமைந்திருக்கும் தன்மைதான் பொருள் மயக்கம்”

# ஏழுவகையாக பொருள் மயக்கம்

- 1.ஒரு சொல், வாக்கியம், ஓர் இலக்கண அமைப்பு ஒரு கூற்றை வடிவமைக்கும் நிலையில்
- 2.கவிதைக்கு ஆசிரியரின் ஒற்றை அர்த்தத்தையும் தாண்டி
- 3. ஒரே சமயம் ஒரே சொல் இரண்டு கருத்துகள்
- 4. ஒரு கூற்றுக்கான இரண்டிற்மேற்பட்ட அர்த்தங்கள் ஒன்றையொன்று ஏற்றுக்கொள்ளாத நிலையில்
- 5. ஆசிரியர் தன் கருத்தைக் கண்டு பிடிக்காத போது

- 6. கவிஞரின் ஒரு கூற்று சூழலுக்குப் பொருத்தமில்லாமல் முரண்பாடாக உள்ள நிலையில்
- 7. கவிதையின் சூழல்- ஒரு சொல்லுக்கு பல அர்த்தங்கள்
- இதன் மீது விமர்சனங்கள் எழுந்தன.

# கிளியந்த் புரூக்ஸ்

- அமெரிக்கர் – முர்றெ
- துலேன் பல்கலைக்கழகம்
- இங்கிலாந்து – ஆக்ஸ்போர்டு கல்லூரில் மேற்படிப்பு
- லௌசியானா பல்கலையில் ஆசிரியர்
- சதன் ரிவ்யூ இதழ்
- திறனாய்வு நூல்கள்
  - 1. நவீனக் கவிதையும் மரபும் (1939)
  - 2. மிகச்சிறப்பாக அழகு செய்யப்பட்ட தாழி 1974
  - 3. கவிதையை அறிதல்1938
  - 4. புனைகதையை அறிதல் 1943

# கவிதை குறித்த தவறான கருத்துக்கள்

- கவிதையை அறிதல் நூலில்
- 1. “ஒரு கவிதை என்பது மிகச்சிறந்த மூளையின் மிகச்சிறந்த கருத்துக்களின் சாரம்”
- 2. “தூய்மையான உணர்ச்சியின் வெளிப்பாடு”
- 3. “கவிதை என்பது மிக உயர்ந்த உண்மையின் அழகான வடிவம்”

# கவிதை உண்மையின் தன்மை

- அறிவியலுடன் ஒப்பிடுதல்
- கவிதை தரும் அறிவு மனித அனுபவ உலகம் சார்ந்து மனித மதிப்பீடுகளை இணைந்தது
- காரண காரிய அறிவை மதிப்பிடக்கூடாது
- உள்ளத்தால் உணரப்படவேண்டும்
- அனுபவமயமாக வேண்டும்
- கவிதை உண்மை அறிவியல் உண்மையை விட உயர்ந்தது
- கவிதை நுண்ணோக்கினை புலமையை வாசகருக்குள் உருவாக்கிறது.

# கவிதை மொழியின் தனித்துவம்
# குறிப்பும் முரணும்

- கவிதை மொழியின் தனித்துவம்
- அறிவியல் மொழியிலிருந்து வேறானது
- உரைநடை மொழியில் பிடித்து விடமுடியாது
- குறிப்பும் முரணும் தான்
- குறிப்பு, முரண், பொருள் மயக்கம் ஆகியவை கவிதை மொழியை வழங்கும் உற்பத்திக் கிடங்கு
- திறனாய்வாளரின் வேலை – கவிதைக்குள் உள்ள கருத்துகளையும் உணர்ச்சிகளையும் கண்டுபிடிப்பதல்ல

- கவிதையை உருவாக்கும் சொற்கள் படிமம் சந்தம் யாப்பு குறிப்பு முரண்  அகியவற்றை அறிந்து விளக்குவதான்
- இலக்கியப் பிரதியை மையமிட்ட திறனாய்வுக் கருத்தாக்கங்களை முன்வைக்கிறார்.

# புதுத்திறனாய்வுக் கோட்பாடுகள்

- 1. இலக்கியப் படைப்பாளி குறித்த கோட்பாடு
- 2. இலக்கியப் படைப்பு குறித்த கோட்பாடு
- 3. இலக்கிய மொழி குறித்த கோட்பாடு
- 4. இலக்கியப் பொருள் குறித்த கோட்பாடு
- 5. கலை கலைக்காகவே என்ற கோட்பாடு
- 6. சிக்காக்கோ திறனாய்வாளர்கள்

# இலக்கியப் படைப்பாளி குறித்த கோட்பாடு

- கவிஞர் வேறு கவிதை வேறு
- கவிஞரின் குடும்பம் சமூகம் வேறுபட்டது கவிதை
- கவிதை ஒரு தனி உயிரி (Entity)
- கவிதைக்குள் இருந்துதான் கவிதை பிறக்கிறது. புறசக்திகளால் அல்ல
- டி.எஸ் எலியட் 1888-1965
  - ஆளுமை விலகல் கோட்பாடு உருவாக்கியர்
  - பாழ்நிலம் (The Waste Land) நோபல் பரிசு
  - உணர்ச்சிகளைக் கொட்டுவல்ல கவிதை
  - தன் உணர்ச்சியிலிருந்து எவ்வளவு விலகிச் செல்ல முடியுமோ அவ்வளவு விலகிச் செல்வது

- “கவிதை என்பது ஆளுமையை வெளிப்படுத்துவதல்ல ஆளுமையிலிருந்து விட்டு விலகி ஓடுவது”
- கவிஞரின் இடம் கிரியாயூக்கி தான்
- தமிழில் ம.இலெ. தங்கப்பா
  - கவிஞர் அம்மிக்கல் போன்றவர்
  - துவையலின் சுவைக்கு அம்மிக்கல்லின் பங்கு

படைப்பு மட்டுமே முன்னிலைப்படுத்தப்பட்டது

# 2. இலக்கியப் படைப்பு குறித்த கோட்பாடு

- இலக்கியப் படைப்பு – ஒரு பொருள் (Object)
- அறிவியல் துறையில் போன்று இலக்கியத்தையும் ஆராய்வது
- இலக்கியத்திற்கு உரிய படிமங்கள், குறியீடுகள், சந்தம், யாப்பு – உயிர்ப்பிணைப்பு
- இலக்கியப் பனுவலுக்கும் ஆசிரியர்க்கும் எந்த தொடர்பும் இல்லை
- ஆசிரியரோடு இணைப்பது "அறிவு மாயை" (Intellectual Fallacy)
- வாசிப்பாளர்க்கான பாதிப்பை (Affective Fallacy)

# 3. இலக்கிய மொழி குறித்த கோட்பாடு

- கவிதை சொற்களால் ஆனது - சொற்கள் மொழியின் ஆதாரம் - மொழியின்றி கவிதை இல்லை
- கவிதை மொழி வெவ்வேறு அர்த்தங்களை வழங்கும் சூழ்நிலைக்கு ஏற்ப
- கவிதையில் வடிவமும் பொருளும் பிரிக்க முடியாது
- வடிவமும் பொருளும் வேறுவேறானவை அல்ல
- கவிதையில் அவை ஒரே உயிர்

- “செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலெ”

அர்த்தங்கள் மாறுவது மட்டுமல்ல அர்த்த இழப்புகளும் நடக்கின்றன.

மொழி தர்க்கங்களை தாண்டி செயல்படுகிறது.

அறிவியலோடு இணைக்கலாம் என்ற கொள்கையில் சிக்கல் ஏற்பட்டது

# 4. இலக்கியப் பொருள் குறித்த கோட்பாடு

- இலக்கிய உண்மை வேறு – அறிவியல் உண்மை வேறு - ஐ.ஏ . ரிச்சர்ட்ஸ்
- பல்வேறு கருத்துகள் எழுந்தன
- 1. கவிதையின் பொருண்மை புற உலகைக் குறிக்காது மனிதனின் உள்ளார்ந்த தூண்டல், துலங்கல்களைக் குறிப்பது- ஐ.ஏ . ரிச்சர்ட்ஸ்
- 2. பொதுவாக எல்லா மக்களாலும் பகிர்ந்து அறியப்படக்கூடிய உணர்வுகளும் உணர்ச்சிகளுமே கவிதைப் பொருண்மையாகும் – டி.எஸ். எலியட்

- யதார்த்தம் போன்று காணப்படக்கூடிய உலகைக் குறிப்பது – டி.இ. ஹல்ம், ஜான்குரோ ரான்சம்
- நீதிக் கருத்துக்களை மதிப்பீட்டுக் காட்டுவது - விண்டர்ஸ்
- தருக்க முறைமைக்கு ஏற்ற வடிவமைப்பே - இரான்சம்
- புறவுலக கூறுகள் சிலவற்றை முழுமையாகவும் அணுக்கத் தொடர்புடையனவாகவும் படைத்துக் காட்டுதல் - ஆலன்டேட்

- கட்டமைப்பாலும் நாடக முறைமையாலுமும் ஒருங்கிமைத்து நிற்கும் நிலை – கிளியந்த புருக்ஸ்
- இலக்கியத்தை அறிவியல் பொருள் போலத் திறனாய்வு முரணாகப் செயல்படுவதைப் பார்க்க முடிகிறது.

# 5. கலை கலைக்காகவே என்ற கோட்பாடு

- கலையினை அரசியலுக்குப் பயன்படுத்தப்படும் போது
- ஐரோப்பாவில் உருவாகிப் புகழ் பெற்றது
- கலை கலையாகவே வெளிப்படவேண்டும்
- எதிர்பார்க்கும் எந்த அர்த்தத்தையும் தரவேண்டியதில்லை. கவிதையாக இருந்தால் போதுமானது.
- “ஒரு கவிதை என்பது எந்த அர்த்தத்தையும் தரக்கூடாது ஆனால் கவிதையாக மட்டும் இருக்க வேண்டும்” இராபர்ட் மெக்லீஷ்
- கென்னத்பர்க், ஜான் எல்லீஸ், கிளியந்த் புருக்ஸ் ஏற்கவில்லை

# 6. சிக்காக்கோ திறனாய்வாளர்கள்

- சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்கள்
- ரொனால்டு கிரேன் "திறனாய்வாளர்களும் திறனாய்வும்" 1952
- "திறனாய்வு குறித்த திறனாய்வு"
- புதுத்திறனாய்வு குறித்த விமர்சனம்
- தனித்த இலக்கியக் கோட்பாடுகள் உருவாக்கவில்லை
- கவிதை பன்முகதன்மை கொண்டு எனவே திறனாய்வும் திறனாய்வு மொழியும் பன்முகதன்மை கொண்டது

- செவ்வியல் திறனாய்வு முறைகளை இலக்கியப் பனுவலுக்கு ஏற்பப்பயன்படுத்தலாம் – தாரளவாதக் கொள்கை
- அ.அ. மணவாளன்
  - இலக்கியப்படைப்பென்பது தன்னிறைவு பெற்ற தன்னியலான ஓர் உயிரியம்
  - செதுக்கிச் செப்பனிடப்பெற்ற மொழியின் ஒரு வடிவம்
  - அது தன் வடிவ அமைதியாலேயே தன் பொருளை விளக்கும் தன்மையது
  - தன் பொருண்மைக்குப் பிற புறத்துறுப்புகளாகிய ஆசிரியன் அவனுடைய வாழ்க்கை வரலாறு, அவன் காலச் சமுதாயச் சூழல் அதனை நுகரும் வாசகன் பெறும் பாதிப்பு போன்றவற்றின் துணையில்லாமலேயே தன்னை வாசகனுக்கு விளக்கும் ஓர் உயிரியப் பொருள்

# புதுத்திறனாய்வும் தமிழ் இலக்கியச் சூழலும்

- தொல்காப்பியத்தில் புதுத்திறனாய்வு கருத்தாக்கங்களைக் கண்டெடுக்க முடியும்
- செய்யுளியல் உறுப்பு 34 “நோக்கு”
- இலக்கியப் பனுவலை முன்நிறுத்தும் போக்கு
- ஆனால் கலை கலைக்காகவே என்ற சிந்தனை இல்லை
- “அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே” (நன்னூல்- 10)
- பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்

- வ. வே.சு. ஐயரின் திறனாய்வு எழுத்துகளில் கவிதையின் அழகியல் தன்மை
- 1918 இல் பாரதியின் "கவிதை" கட்டுரை
- கண்ணன் பாட்டின் முன்னுரை
- "கம்பராமாயண ரசனை" தொடர் கட்டுரை
- "ஓர் பெருங்காப்பியம் அநேக அவயங்கள் சேர்ந்ததாயிருப்பினும் ஒரு ஜீவப்பிராணியைப் போல ஓர் தனிப்பிண்டமாயிருத்தல் வேண்டும்….. ஏகம் என்கிற உணர்ச்சி அக்காவியத்தில் தோன்ற வேண்டும்" - பாரதியார்

# புதுத்திறனாய்வு எழுத்தாளர்கள்

- 1930 இல் மணிக்கொடி எழுத்தாளர்கள் - புதுமைப்பித்தன், கு.ப.ரா. ந. பிச்சமூர்த்தி, பி.எஸ். இராமையா
- எழுத்து இதழ் – சி.சு செல்லப்பா, வெங்கட் சாமிநாதன், தருமு சிவராம், டி.கே. சிதம்பரநாத முதலியார்.
- கசடதபற இதழ்- வைத்தீஸ்வரன், சுந்தர ராமசாமி
- "வேறு எதில் வேண்டுமானாலும் சமரஸம் பேசலாம், இலக்கியத்தின் தரத்தில் சமரஸம் பேசி முடிவு கட்டக்கூடாது" – க.நா.சு

# எப்படிப்பட்டது இலக்கியம்?

- "இலக்கியம் புனிதமானது,ஞானமார்க்கம் உடையது, உன்னதமானது, பூரணத்துவம் உடையது, தரிசனம் நிறைந்தது" வெங்கட் சாமிநாதன்
- எதையும் எழுதுங்கள், ஆனால் அதையும் இலக்கியமாக  எழுதுங்கள்" கசடதபற
- சமூகச்சிக்கலைப் புறக்கணித்த இவர்களை எதிர்த்து – கைலாசபதி  திறனாய்வுப் பிரச்சனைகள் ( க.நா.சு குழுவை முன்வைத்து) நூல் எழுதினார்.
- அழகியல், இரசனைமுறை, வெளியீட்டுமுறை, திறனாய்வுகள் நவீனத்துவம் ஆகியவற்றிக்கு அடிப்படை புதுத்திறனாய்வே

# 4. மொழியியல் திறனாய்வு

அலகு -2

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- 1.மொழியியல் திறனாய்வும் ரோமன் யாக்கப்சனும்
- 2. பெர்டினண்ட் தெ சசூரும் மொழியியல் கோட்பாடும்
- 3.மரபார்ந்த மொழியில் அணுகுமுறை
- 4. புதைவடிவம் – புறவடிவம்
- 5. மக்கள் மொழியா? இலக்கிய மொழியா?
- 6. மூலப்பாட ஆய்வும் மொழியில் அணுகுமுறையும்
- 7. இலக்கியமும் வரலாற்று மொழியியலும்
- 8. இலக்கியமும் சமூக மொழியிலும்

# முன்னுரை

- மொழினைப் பயன்படுத்தும் திறமையினால் இலக்கியம் பிறக்கிறது. இலக்கியம் என்பது அதன் மொழியைத் தவிர வேறல்ல.
  - "இலக்கியம் மொழிவரலாற்றின் ஒரு பகுதி "
  - "அதனையே முற்றிலும் சார்ந்திருக்கிறது" – f.w. பாற்றீசன்

  மொழியியல் திறனாய்வின் விளைவு "நடையியல் திறனாய்வு"

  ஒவ்வொரு படைப்பாளியும் பொதுமொழியிலிருந்து தனக்கான மொழிநடையைப் பின்பற்றுகிறார்.

- மொழிநடையின் வகைப்பாடுகள்
- தனிமனிதர்கள் – திரு.வி.க. நடை, மறைமலையடிகள் நடை, அண்ணாதுரை நடை
- காலம் – சங்க இலக்கிய நடை, 19 ஆம் நூற்றாண்டு நடை
- சமூக இயக்கங்கள் – திராவிட இயக்கத்தினர் நடை, பொதுவுடைமை நடை
- மொழிக்கும் இலக்கியத்திற்குமான உறவு – வெளிப்படையானது, நுட்பமானது
  - "சிலசமயங்களில் ஒரு சொற்றொடரிலிருந்து ஒரு கதாபாத்திரமே உருவாகி விடுகிறது"- அலெக்சி டால்ஸ்டாய் (உருஷ்ய எழுத்தாளர்)

- மொழி இரட்டைச் செயல் புரிகிறது
- முதற்கண் மனிதர்களின் அல்லது படைப்பாளிகளின் கலை பூர்வமான சிந்தனைக்கு மொழிதான் உருவம் கொடுக்கிறது. இரண்டாவதாக உருவம் கொடுத்தபின்னர் மேலும் மேலும் அதனைப் படைப்பாளியிடமோ வாசகனிடமோ தூண்டுகிற ஒரு சக்தியாகவும் விளங்குகிறது.” அலெக்சி டால்ஸ்டாய்

# 1.மொழியியல் திறனாய்வும் ரோமன் யாக்கப்சனும்

- தொல்காப்பியம் இலக்கியத்தின் கூறுகளாக எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றை தொல்காப்பியம் கொண்டுள்ளது.
- செய்யுளுக்கான 34 உறுப்புகள், மரபியலில் சொற்குறித்த விளக்கம் ஆகியவற்றில் மொழிசார்ந்த இலக்கிய அணுகுமுறை உள்ளது
- உரையாசிரியர்கள் இலக்கிய நயத்தை விளக்கியுரைக்க இலக்கணக்குறிப்புகள் வழங்குகின்றனர்
- இலக்கண விதி மீறப்படும் போது "வழுவமைதி"

- மொழியியல் திறனாய்வு – மொழியியல் துறையுடன் தொடர்புடையது.
- ரோமன் யாக்கப்சன் மொழியியலும் கவிதையிலும் என்ற கட்டுரை மொழியியல் திறனாய்வு செழிக்கக் காரணம்
- தகவல் பரிமாற்றத்தில் நிகழும் வினைகள்

தகவல் அனுப்புநர் Addresser → சந்தர்ப்பம் (Context)
செய்தி (Message)
தொடர்பு (Contact)
மொழி ஒழுங்கமைவு ( Code) → தகவல் பெறுநர் (Addresse)

- படைப்பாக்கத் தளத்தில் நிகழும் வினைகள்

எழுத்தாளர் Writer → சந்தர்ப்பம் (Context) / இலக்கியப்பிரதி (Writing) / தொடர்பு (Contact) / மொழி ஒழுங்கமைவு ( Code) → தகவல் பெறுநர் வாசகர் (Addresse)

- மொழியின் செயல்பாடுகள் விளக்கம்
  - படைப்பாளியின் படைப்பு மனம் மொழியால் ஆனது
  - அவர் எழுத நினைக்கும் கருத்து சமூகச் சந்தர்ப்பம் அல்லது சூழலால் பிறப்பது. எனவே கருத்தும் அந்தச் சமூகத்தின் மொழியமைப்பிலிருந்து பிறப்பது
  - அந்தக் கருத்து இலக்கியப் பிரதியாகும் போது மொழிதான் அந்தப் பிரதினை நிர்ணயிக்கிறது. அந்தப் பிரதிக்குப் பயன்படுத்தப்படும் மொழி பலவிதமான ஒழுங்கமைதிகளைத் தன்னுள் கொண்டிருப்பது.
  - படிக்கின்ற வாசகருக்குள்ளும் மொழிதான் வினைபுரிகிறது.

இலக்கியச் செயல்பாடு அனைத்தையும் மொழியின் செயல்பாடாகப் பார்க்கிற பார்வையை யாக்கப்பசனின் மொழியியல் கோட்டுபாடு வளர்த்தெடுத்தது.

# 2. பெர்டினண்ட் தெ சசூரும் மொழியியல் கோட்பாடும்

- 1970 அமைப்பியல் வாதம் (Structuralism)
- மொழியின் விளையாட்டுதான் இலக்கியம்
- ஆதியில் சொல் இருந்தது – அதாவது எழுத்தாளருக்கு முன்பே சொல் இருந்தது. – சொல்லிருந்து இலக்கியப்பிரதி –
- எழுத்தாளரே அவருக்கு முன்பே இருந்துவரும் சொல்லிருந்துதான் உருவானவர்
- மொழி யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதில்லை மொழியமைப்புதான் யதார்த்தத்தையே உருவாக்குகிறது.

- அர்த்தத்தின் உறைவிடம், வாழ்வில் படைப்பாளி பெறும் அனுபவம் அல்ல, மாறாக  மொழி எந்த விதிமுறைகளைகளின் கீழ் செயலாற்றுகிறதோ, அந்த விதிமுறைகளே அர்த்தத்தை நிர்ணயிக்கின்றன.
- மனிதர்கள் மொழியைப் பேசவில்லை.. மொழிதான் மனிதர்களைப் பேசுகிறது.
- இலக்கியத்தை விளக்குவது என்பது மொழியை விளக்குவதுதான்

# பெர்டினண்ட் தெ சசூர்1857-1913 நவீன மொழியியலின் தந்தை (FERDINAND DE SAUSSURE)



- ஜெனீவாவில் 1857இல் பிறந்தார்.
- 1880 ஆம் ஆண்டு சமஸ்கிருதம் தொடர்பாக ஆய்வு செய்து முனைவர் பட்டம்
- ஜெனீவாப் பல்கலைக்கழகத்தில் சமசுக்கிருதம், இந்திய-ஆரியம் ஆகியவற்றுக்கு விரிவுரையாளராகப் பணியாற்றினார்
- 1913 ஆம் ஆண்டு காலமானார்
- 1916 இல் "பொதுமொழியியலின் செல்திசை"
- மொழிக்கும் அது குறிக்கும் சொல்லுக்கும் எந்தவித காரண காரியத் தொடர்பும் இல்லை

- ஒவ்வொரு சொல்லும் இடுகுறி தன்மை கொண்டவை
- கண் என்ற சொல்லுக்கும் அது குறிக்கும் அந்தப் பொருளுக்கும் எவ்வித தொடர்பில்லை
- மண் என்ற சொல் கண் என்ற பொருளைக் குறிக்கவில்லை.
- சொல்லைக் குறிப்பான் (Signifier)
- பொருளைக் குறிப்பீடு (Signified)
- மொழிக்கிடங்கு (Language)
- பேச்சு மொழி (Parole)

- மொழிக் கிடங்கு என்பது மொழியின் ஒட்டுமொத்தமான அமைப்பைக் குறிக்கும்
- பேச்சுமொழி குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட சூழலில்  மனிதன் பேசுவது
- மொழிக்கிடங்கு உருவம் அற்றது
- பேச்சுமொழி உருவம் கொண்டது
- விதிகளுடன் கூடிய செஸ் விளையாட்டு – மொழிக்கிடங்கு
- ஒரு காயை நகர்த்துவது பேச்சு
- இலக்கிய அழகியல் தத்துவம் ஒரு மொழிக்கிடங்கு அவற்றின் அடிப்படையில் பிறக்கும் ஓரு இலக்கியப்பனுவல் பேச்சு
- மொழியையும் மொழி செயல்பாட்டையும் ஓர் அமைப்புக்குள் கொண்டு வந்தார்.

# 3.மரபார்ந்த மொழியில் அணுகுமுறை

- ஒலியியல் அணுகுமுறை
- அமைப்பியல் வாதத்திற்கு முன்பு – ஒலியியல், சொல்லியல், தொடரியல்
- நெட்டெழுத்துகள், குற்றொழுத்துகள், மெல்லின ஒலிகள், வல்லின ஒலிகள், உயிரொலிகள், மெய்யொலிகள்.
- பேரா. முத்துச்சண்முகன், அகத்தியலிங்கம். செ.வை. சுப்பிரமணியம்
- பேரா. தி.சு நடராசன்- குறுந்தொகைப் பாடல்கள் நடையியல் பண்பு வேறுபடுவதை எடுக்காட்டினார்.

# புதைவடிவம் – புறவடிவம்

- மாற்றிலக்கணக் கோட்பாடு
- இலக்கியம் தொடரமைப்பினாலும் ஆனது
- “வார்த்தை ஒருவகையான காட்டு விலங்காகவே எனக்குத் தோற்றமளித்தது, அது என்னை கீழே தள்ளியது, எனக்குப் பணியாமல் முரண்டு பண்ணியது, புதிர்க்காட்டிற்குள் என்னை இழுத்துச் சென்றது,” - அலெக்சி டால்ஸ்டாய்
- அடங்க மறுக்கும் சொற்களால் அமையும் ஒரு தொடர் (வாக்கியம்) பலவிதமான ஆழங்களையும் அடுக்குகளையும் கொண்ட புதிராகவே விளங்குகிறது – நோம் சாம்ஸ்கி

- ஒரு தொடரில் இரண்டு விதமான அமைப்புகள்
- புறநிலைத்தொடர் (Surface Structure)
  - வெளிப்படையாகத் தோன்றுவது
- புதைநிலைத் தொடர் (Deep Structure)
  - உள்பொதிந்து கிடப்பது
  - பல புறநிலைத்தொடர்கள் தோன்றக்கூடும்
  - உவமை, உருவகம், ஆகுபெயர், அன்மொழித்தொகை, உள்ளுறை, இறைச்சி, படிமம், குறியீடு

# 5. மக்கள் மொழியா? இலக்கிய மொழியா?

- மக்கள் மொழி
- செவ்வியல் சார்ந்த புத்தகமொழி

# 6. மூலப்பாட ஆய்வும் மொழியில் அணுகுமுறையும்

- மூலப்பாடத்தை மீட்டுருவாக்கம் செய்ய
- ஒரு நூலின் ஆசிரியர் குறித்து கருத்து வேறுபாடு எழும் போது
- ஒரு நூலின் காலம் குறித்து
- ஒரே காலகட்டத்தில் தோன்றிய இலக்கியங்களின் மொழிநடையைப் புரிந்து கொள்ள
- ஒரு படைப்பாளியே வேறு வேறு மொழிநடைகளைப் பயன்படுத்தியிருக்கும் போது
- பல கபிலர்கள், ஔவையார்கள்
- சீனாவில் சிவப்பு அரங்கின் கனவு புதினத்தின் ஆசிரியர் ஒருவரா,?

# 7. இலக்கியமும் வரலாற்று மொழியியலும்

- காலந்தோறும் எவ்வாறு மாற்றத்திற்கு உள்ளாகி வந்துள்ளது.
- சங்ககாலத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் வேறு
- நாற்றம் என்ற சொல் பெற்றிருக்கும் மாற்றம்
- காமம் என்ற சொல்
- தமிழ் காலந்தோறும் மாறி வந்துள்ளதை
- தெ.பொ.மீ. தமிழ்மொழி வரலாறு
- வி.ஐ. சுப்பிரமணியம், இராம. சுந்தரம், பொற்கோ, அகத்தியலிங்கம், செ.வை. சுப்பிரமணியம், கோதண்டராமன்

# 8. இலக்கியமும் சமூக மொழியிலும்

- சமூக மொழியியல்
- வேறுபாடுகள்
- 1. உச்சரிக்கும் முறையில்
- 2. நீட்டி, குறுக்கி ஒலிக்கும் முறையில்
- 3. சொற்களுக்குப் பொருள் கொள்ளும் முறையில்
- 4. புதிய சொற்களைப் பயன்படுத்தும் முறையில்

- **மொழி வேறுபடுவதற்கான நிலைகள்**
- 1. வட்டாரத்திற்குத் தகுந்தவாறு
- 2. சாதி வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு
- 3. மத வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு
- 4. தொழில் வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு
- 5. கல்வி அறிவிற்குத் தகுந்தவாறு
- 6. வர்க்க வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு
- 7. தான் சேர்ந்த இயக்கத்திற்குத் தகுந்தவாறு

- கோவை,சென்னை, நெல்லை, குமரி போன்ற இடங்களில் மொழிகளின் நிலை மாறுபடுகிறது.
- கி. இராஜநாராயணன் - கரிசல் காட்டு வட்டார அகராதி
- பெருமாள் முருகன் - கொங்குநாட்டு வட்டார அகராதி
- அ.கா. பெருமாள் - நாஞ்சல் நாட்டு அகராதி

# 5.ஒப்பிலக்கியத்திறனாய்வு

அலகு -2

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- ஒப்பீட்டுமுறைத் திறனாய்விற்கான அடிப்படை
- பழந்தமிழில் ஒப்பிலக்கியத் திறனாய்வு
- நவீன ஒப்பிலக்கியத் திறனாய்வின் முன்னோடிகள்
- ஒப்பிலக்கியம் வரையறை
  - தாக்கக் கோட்பாடு
  - வரவேற்பும் தாக்கமும்
  - இணைவரை
  - போலச்செய்தலும் தாக்கங்களின் பல்வேறு வடிவங்களும்
    - இலக்கியத் திருட்டு
    - இலக்கியக் கடன்
    - தழுவல்
    - மொழிபெயர்ப்பு
    - நடைப்பாங்கு
    - கிண்டல் இலக்கியம்
    - ஒட்டுச் சேர்க்கை
    - நையாண்டி
    - தாக்கக் கொள்கையும் தனித்தன்மையும்
  - அடிக்கருத்தியல் கோட்பாடு
    - அடிக்கருத்தும் வடிவமும்
    - அடிக்கருத்தும் குறிப்பொருளும்
    - கதைமாந்தர்களும் அடிக்கருத்தும்
    - அடிக்கருத்துக் குறித்துப் பேராசிரியர் லெவின் கூறுவன
    - வீஸ்டின் கூறும் கருத்துகள்
    - பிரெஞ்சு –அமெரிக்கக் கோட்பாடுகள்

# ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு

- மனித மூளை அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை
  - 1. போலச் செய்தல்
  - 2. ஒப்பிட்டுச் செய்தல்
  - 3. உற்றுநோக்கல்

  எதிர் இணைநிலைகள்

  குள்ளம் / உயரம்

  சிவப்பு / கறுப்பு

  நன்மை / தீமை

  வெற்றி / தோல்வி

  முதலாளி / தொழிலாளி

  ஆண் / பெண்

ஒப்பியல் அணுகுமுறை முதன்முதலில்

உயிர்களின் பரிணாம வளர்ச்சி - டார்வின்

வால் உயிரியினங்கள்

மானுடவியல் துறை

லெவிஸ்ட்ராஸ்

# ஒப்பீட்டுமுறைத் திறனாய்விற்கான அடிப்படை

- 4 கருதுகோள்கள் – தி.சு. நடராசன்
  - 1. ஒத்த சமுதாய – வரலாற்றுச் சூழல்களில் பிறக்கும் இலக்கியங்கள் ஒத்த தன்மையைப் பெற்றிருக்கக் கூடும்
  - 2. ஏற்புத் திறனைச் சார்ந்து ஓர் இலக்கியம் இன்னொரு இலக்கியத்தை தனது செல்வாக்கிற்கு உட்படுத்தக் கூடும்
  - 3. மொழியாலும் இனத்தாலும் அரசியல்-புவியியல் பரப்பாலும் வேறுபட்டாலும் அத்தகைய வரையறைகளை மீறி இலக்கியங்கள் தமக்குள் ஒன்றுபட்ட பண்புகளையும் பயன்களையும் பெற்றிருக்கக் கூடும்
  - 4. ஒன்றுபட்டும் வேறுபட்டும் அமைகிற பின்புலங்களிலிருந்து பார்க்கிற போது குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளும் கூறுகளும் தெளிவாகவும் விளக்கமாகவும் புலப்படக்கூடும்

# பழந்தமிழில் ஒப்பிலக்கியத் திறனாய்வு

- தொல்காப்பியம் –
  - நாடக வழக்கு, உலக வழக்கு, செவ்வியல் வழக்கு
  - "களவு" வடமொழி மரபு
  - உரையாசிரியர்கள் – வடமொழியோடு ஒப்பிட்டனர்
  - திருக்குறள் – பரிமேலழகர் , புறநானூறு, திருவாய்மொழி,

# நவீன ஒப்பிலக்கியத் திறனாய்வின் முன்னோடிகள்

- ஐரோப்பியர்கள் வருகை
- வ.வே.சு. -ஐயர் கம்பராமணம் ஓர் ஆய்வு ஆங்கில நூல்
  - வால்மீகி, கம்பர், ஹோமர் வெர்ஜில், மில்டன்
- கைலாசபதி – ஒப்பியல் இலக்கியம், தமிழ் வீரயுகக்கவிதை, தாகூரும் பாரதியும்
- தொ.மு.சி. இரகுநாதன் பாரதியும் ஷெல்லியும், கங்கையும் காவிரியும் –
  - ஷெல்லி, தாகூர்
- எஸ். இராமகிருஷ்ணன் கம்பனும் மில்டனும்
- பேரா. வை. சச்சிதானந்தம் விட்மனும் பாரதியும் – ஒப்புமை ஆய்வு
- கே. செல்லப்பன், ப. மருதநாயகம், தமிழண்ணல், கதிர். மகாதேவன், பிச்சை, ஆனந்தகுமார்
- பிச்சை - ஒப்பிலக்கியம் இதழ்

# ஒப்பிலக்கியம் வரையறை

- தனித்துறை இயல்புகளைக்கொண்டது
- ஆய்வுப்பொருள்
- தனியான ஆய்வு நெறிமுறைகள், கோட்பாடுகள்
- “ஒரு மொழி இலக்கியத்தை அவ்விலக்கியத்தோடு ஏதேனும் ஒரு விதத்தில் தொடர்புடைய பிறமொழி இலக்கியத்தோடு அல்லது பிறமொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராய்வதாகும்”
- புறப்பொருளாகப் பார்த்து அறிவியல் முறைப்படி ஆராயும் துறை
  - வகைமைக் கோட்பாடு
  - தாக்கக்கோட்பாடு
  - அடிக்கருத்துக் கோட்பாடு

- ரிமாக் என்ற அறிஞர்
- இலக்கியத்தைப் பிற நுண்கலைகளான இசை, ஓவியம், சிற்பம். நடனம், முதலிய கலைகளோடு ஒப்பிட்டு ஆய்வது
- இலக்கியத்தைப் பிற துறைகளான வரலாற்றில், உளவியல், சமூகவியல், மானுடவியல், தத்துவம், அறிவியல் முதலிய மனிதம் சார்ந்த துறைகளோடு ஒப்பிட்டு ஆய்வது.

# வகைமைக் கோட்பாடு

- இலக்கியத்தைப் பகுத்துக் காட்டும் நெறிகள்
  - 1. இலக்கியக் காலப் பகுதிகள்
  - 2. இலக்கிய இயக்கங்கள்
  - 3. இலக்கிய வகைமைகள்
  - இலக்கியத்தை ஒழுங்குபடுத்தும் நெறி
  - இலக்கியத்தின் புறஅமைப்பு (யாப்பும் அமைப்பும்)
  - அக அமைப்பு- (இலக்கியப்போக்கு,குறிப்பு, பொருள் கொள்கையளவில் அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துவதே

# தாக்கக்கோட்பாடு

- முதன்மையான கோட்பாடு
- பிரஞ்சுக் கோட்பாடு
- எதுவென்றின் தாக்கமின்றி எதுவும் பிறப்பதில்லை
- வளர்ச்சிக்கு அடிப்படை தாக்கமே
- அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞர்கள்
- 1. வரவேற்பு (Reception) பெறுதல்
- 2. தாக்கம் (அ) செல்வாக்கு (Influence)
- 3. இணைவரை (Parallel Study)

# வரவேற்பும் தாக்கமும்

- ரிசப்ஷன் – பெறுதல் – வை. சச்சிதானந்தம்
- “இரண்டு இலக்கியங்களுக்கு இடையிலான உறவு ஏற்படும் போது தாக்கம் ஏற்படுவதற்கு முந்தைய நிலையே”
- முதல்கட்டம் வரவேற்பு
- இரண்டாம் கட்டம் தாக்கம்
- ஒரு எழுத்தாளர்களுக்கே தெரியாமல் அவருக்குள் நிகழ்கிற நிகழ்ச்சியாகும்.

# இணைவரை

- வகைமையாலோ காலத்தாலோ பாடுபொருளாலோ பாத்திரப் படைப்பினாலோ ஏதேனும் ஒருமுறையில் தொடர்புடைய இரண்டு மொழி இலக்கியங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு எப்படித் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது.  எந்தெந்த இடங்களில் ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் இணையாக வைத்து ஆராய்வதாகும்.
- படைப்பு உருவாவதற்குக் காரணம் மூலம்
- இரகுநாதன் – பாரதியும் ஷெல்லியும். கங்கையும் காவிரியும்
- முவ. மலர்விழி சாமர் செட் – திருமதி கிராடக்
- முவ. மண்குடிசை எச்.ஜி. வெல்ஸ் கண்ணுக்குத்தெரியாத மனிதன்

# போலச் செய்தலும் தாக்கங்களின் பல்வேறு வகைகள்

- எட்டுவகை
- 1.இலக்கியத் திருட்டு
- இலக்கியத்தின் கருத்துகள், வரிகளை யாருக்கும் தெரியாமல் பயன்படுத்துவது
- 2.இலக்கியக் கடன்
- யாவருக்கும் தெரியும்படி பயன்படுத்துவது – திருக்குறளிலிருந்து மணிமேகலை
- 3.தழுவல்
- தன்மேல் செல்வாக்குச் செலுத்திய படைப்பை ஒட்டி புதிய படைப்பை உருவாக்குவது – வால்மீகி-கம்பர் . த சீக்ரெட் வே –மனோன்மணியம்

# தாக்கங்களின் பல்வேறு வகைகள்

- 4.மொழிபெயர்ப்பு
- தாய்மொழியில் தரும் முயற்சி
- 5.நடைப்பாங்கு
- படைப்பாளியின் நடையினைப் பின்பற்றுதல் - பாரதிதாசன் – வாணிதாசன், சுரதா, முடியரசன், லெனின் தங்கப்பா
- 6.கிண்டல் இலக்கியம்
- புகழ் பெற்ற இலக்கிய வடிவத்தை பின்பற்றி
- 7.ஒட்டுச் சேர்க்கை
- பல இலக்கியங்களின் துண்டு துண்டாக இணைப்பது கலம்பகம்
- 8.நையாண்டி
- புகழ்பெற்ற இலக்கியம் – தருமி குலேசர்

# தாக்கக் கொள்கையும் தனித்தன்மையும் (Influence and Originality)

- முழுமையான தனித்தன்மை இல்லை
- சூனியத்திலிருந்து இலக்கியம் பிறப்பதில்லை
- இலக்கியத்தின் அடிப்படைக் கருவியாக மொழி தனிமனிதரின் படைப்பு அல்ல, அது சமூகத்தின் சேமிப்புக் கிடங்கு
- படைப்பாளி காலத்தேவைக்கு ஏற்ப மறு உருவாக்கம் செய்கிறார்
- இலக்கியத்தின் தனித் தன்மை மறுஉருவாக்கம்
- “இலக்கிய உலகில் பெரிய கடனாளி சேக்ஸ்பியர்தான். ஆனால் அவர் செங்கல்லைக் கடனாக வாங்கிக் தங்கக் கற்களாக மாற்றிக் கொடுத்தார்”

# அடிக்கருத்தியல் கோட்பாடு

- ஹாரிலெவின் -
- ஒரு படைப்பின் அடிக்கருத்தை உருவி எடுத்துவிட்டால் அந்தப் படைப்பின் முக்கியத்துவம் குறைந்து போவதை அறியலாம்.
- 1.ஒரு படைப்பின் உட்கரு எவ்வாறு உருவாகிறது?
- 2.உருவாக்கத்தில் தனிமனிதரும் சமூகமும் பெறும் இடம் என்ன?
- 3.அந்த படைப்பின் வெற்றிக்கு இந்த அடிக்கருத்தின் பங்களிப்பு என்ன?
- 4.படைப்பின் அடிக்கருத்துத் தொடர்ந்து மாறிக்கொண்டே வருவதற்கான காரணம் என்ன? ஆகிய கூறுகளை ஆராய்கிறது.

# அடிக்கருத்தும் வடிவமும்

- ஒரு படைப்பின் அடிக்கருத்தையும் வடிவத்தையும் தனித்தனியாகப் பிரிக்கமுடியாது.
- உல்ரீச் வீஸ்டின் – அடிக்கருத்தைத் தனியே பிரிக்கலாம்
- இலக்கியம் வாசகர்களுக்குப் புரிவதும் அவர்களின் அனுபவமாக மாறுவதும் அந்த இலக்கியத்தில் அமைந்துள்ள அடிக்கருத்தின் அடிப்படையில்தான்.
- எந்த இலக்கிய வடிவமும் கருவை ஆதாரமாகக் கொள்ளாமல் அந்தரத்தில் இயங்கமுடியாது.

# அடிக்கருத்து - பிராவர்

- இலக்கிய முழுமைக்கும் பொதுவாக அமையக்கூடிய ஐந்து அடிக்கருத்துகள்
- 1. இயற்கை நிகழ்ச்சிகளும் அவற்றை எதிர்கொள்ளும் மனிதச் செயல்பாடுகளும்
- 2. இலக்கியத்தில் திரும்பத்திரும்ப வருகின்ற சில குறியீடுகள் ( நிலம், பொழுது. முக்கோணக் காதல் முதலியவை)
- 3. உண்மைக்கும் மாயைக்கும் (பொய்மை, போலிமை) இடையே உள்ள போராட்டம்
- 4. நிறைவேறாது என்கிற ஒன்று நிறைவேறிவிடுவது
- 5. புராணக்கதை, வரலாற்று நிகழ்ச்சி, கர்ணப் பரம்பரைக் கதை முதலியவற்றிலிருந்து புதிய இலக்கியங்களைக் காலத்திற்கு ஏற்ப படைத்துக் கொள்ளுதல்

# அடிக்கருத்தும் குறிப்பொருளும் - வேறுபாடு

- அடிக்கருத்து – குறிப்பொருள் எல்லா இலக்கியப் படைப்புகளில் தவறாது இடம் கொண்டிருக்கும்
- குறிப்பொருள் – கதையில் திரும்பத்திரும்ப வரும் நிகழ்ச்சிகள், உத்திகள், நியதிகள்
- அடிக்கருத்து – கதைமாந்தர்கள், கதைநிகழ்ச்சிகள் பின்னிப் பிணைந்திருக்கும்,ஓர் அடிக்கருத்துத்தான் இருக்கவேண்டியதில்லை.
- சிலப்பதிகாரம் – கதைமாந்தர்கள் – புலம் பெயர்தல், கனவு, மடல் - குறிப்பொருள்கள்
- அடிக்கருத்து காலத்திற்கேற்ப மாறுபடும்
- விதிவலிமை -ஊழ்வினை,
- அரச நீதி - அரசியல் பிழை
- கற்புநெறி - உரைசால் பத்தினி,
- தமிழ்மொழி -தமிழ்த்தேசிய காப்பியம்

# கதைமாந்தர்களும் அடிக்கருத்தும்

- இலக்கியப் படைப்பின் வழி சமூகத்தில் நிலைத்து நிற்கும் கதைமாந்தர்கள்
- தீமையின் அடையாளம் –துரியோதனன் இராவணன்
- தீமையின் அடையாளம் - சகுனி, கூனி
- வள்ளலின் குறீயீடு – கர்ணன்
- கற்பின் குறீயீடு – கண்ணகி
- கருத்தின் குறியீடாக வளர்ச்சியடைந்து அன்றாட வாழ்வில் பாரக்கிற உண்மை மனிதர்களைவிட நமக்கு நெருக்கமானவர்களாக மாறிவிடுகிறார்கள்

# அடிக்கருத்து – லெவின்

- 1. அடிக்கருத்துகள் படிமங்களைப் போலப் பல கருத்துக்களைத் தன்னுள் கொண்டதாகும்.
- 2. அடிக்கருத்துக்கள் காலம் காலமாகப் பல மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன.
- 3. சில எழுத்தாளர் சில அடிக்கருத்துக்களைத்தான் திரும்பத்திரும்ப இலக்கியத்தில் கையாளுகிறார்கள்.

# அடிக்கருத்து – வீஸ்டின்

- 1. அடிக்கருத்து, உருவம், உள்ளீடு, பொருள் ஆகிய நான்கையும் ஒன்றாகச் சேர்க்கலாம்
- 2. அடிக்கருத்தை எளிதாகத் தெரிந்துகொள்ள அந்த இலக்கியத்தின் கதையைச் சுருக்கமாக எழுதச் சொல்கிறார்
- 3. அடிக்கருத்திற்கும் குறிப்பொருளுக்கும் இவர் புதிதாக விளக்கம் தருகிறார். அதாவது கதாபாத்திரங்கள் எல்லாம் அடிக்கருத்து என்றும் நிகழ்ச்சிகள் எல்லாம் குறிப்பொருள் என்றும் கூறுகிறார்
- 4. ஒரு படைப்பின் குறிக்கோள் என்னவோ அதுதான் அடிக்கருத்து

# அடிக்கருத்து – வீஸ்டின்

- 5. அடிக்கருத்திற்கு முடிவே இல்லை. ஆனால் குறிப்பொருள் என்று சொல்லப்படும் அடிப்படை நிகழ்ச்சிகள் உலக இலக்கியம் முழுவதிலுமே மொத்தத்தில் 31 தான் என்கிறார்
- 6. வெறும் குணங்களின் சித்திரிப்புகளாக வரும் பாத்திரங்கள் அடிக்கருத்திற்கும் குறிப்பொருளுக்கும் நடுவில் வருபவைகளாகும்
- 7. குணங்களின் சித்திரிப்புகளாக வரும் கதைமாந்தர்கள் உயிர்ற்றவர்கள். வெறும் குணங்களாக மட்டுமே வருபவர்கள்
- 8. உயிருள்ள கதைமாந்தர்களை அடிக்கருத்தியல் என வரையறுக்கலாம். அதாவது ஒரு குறிப்பிட்ட பாத்திரம் குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட காரணத்திற்காக இயங்கிக் கொண்டே இருப்பது.

# பிரெஞ்சு – அமெரிக்கக் கோட்பாடுகள் – ஒப்பீடு வேறுபாடுகள்

- 1. இலக்கியத்தின் தோற்றத்திற்கான காரணம் தாக்கம் மட்டுமே
- தாக்கம் ஒரு காரணி மட்டுமே – பன்முகப்பட்ட காரணங்கள்
- 2. பல்வேறுபடிநிலைகள்  அறியவில்லை –
- மூன்று படிநிலைகள்
- 3. பல்வேறு நிலைகளை அறிந்திருக்கவில்லை
- இலக்கியத் திருட்டு, கடன், தழுவல் உள்ளிட்ட பல நிலைகள்
- 4. நேரடியாகக் காரண- காரியத் தொடர்புடையது. அறிவியல் முறைப்படி ஆராயக்கூடியது
- பல கலை நுணுக்கங்களைக் கொண்டு முருகியல் பாதையில் அணுகவேண்டும்